(2024-25-ஆம் கல்வியாண்டில் அனுமதிக்கப்பட்ட மாணவ-மாணவியருக்கு மட்டும்)

(பக்கங்களின் எண்ணிக்கை : 2)

SUBJECT CODE 24 UTL 1C1

REG.NO:

**என்.ஜி.எம். கல்லூரி (தன்னாட்சி) : : பொள்ளாச்சி**

**பருவ இறுதித் தேர்வுகள் : நவம்பர் – 2024**

**இளநிலை பட்ட வகுப்புகள்** **மதிப்பெண்கள் : 75**

**அரசு உதவி (கணிப்பொறியியல்/வணிகவியல் மட்டும்) மற்றும்**

**சுயநிதி (பி.ஏ.தமிழ் இலக்கியம். நீங்கலாக )**

**முதல் பருவம்** **நேரம் : 3 மணி**

## பகுதி – 1

## தமிழ்த்தாள் - 1

### பகுதி – அ (10x1=10 மதிப்பெண்கள்)

**பின்வரும் அனைத்து வினாக்களுக்கும் சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக** **(K1)**

1 மாணவனுக்கு என்ற கவிதையின் ஆசிரியர் யார்?
அ) பாரதியார் ஆ) பாரதிதாசன் இ) தமிழ்நம்பி ஈ) நாமக்கல் கவிஞர்

2. ஒரே குரல் எனும் கவிதை யாருடையது?
அ) ஈரோடுதமிழன்பன் ஆ) மு. மேத்தா இ) தமிழ் நம்பி ஈ) தேனரசன்

3. வெள்ளிவீதியார் பாடல்கள் எந்த நூலில் இடம் பெற்றுள்ளன?
அ) குறுந்தொகை ஆ) நற்றிணை இ) ஐங்குறுநூறு ஈ) பரிபாடல்

4. உவமைத் தொகைக்குச் சான்று தருக?
அ) மரப்பெட்டி ஆ) நாட்டுப்பற்று இ) மலர்க்கண் ஈ) மலர்க்கூடை

5. எவரோடு ஐவரானோம் என்று இராமன் கூறுகிறார்?
அ) வீடணன் ஆ) சுக்ரீவன் இ) அநுமன் ஈ) குகன்

**அனைத்து வினாக்களுக்கும் ஓரிரு சொல் தொடரில் விடை தருக.** **(K2)**

6. கவிதை எதன் போர்வாள்?
7. பொருள் கூறுக– கேண்மை, விருட்சங்கள்
8. சியோல் நகரம் எங்குள்ளது?
9. ஆர்த்தன பறவைகள் என்பதன் இலக்கணக் குறிப்பு யாது?
10. சிறுகதையின் பிறப்பகம் எது?

### பகுதி – ஆ ( 5 x 5 = 25 மதிப்பெண்கள்)

**கீழ்க்காணும் வினாக்களுக்குப் பயன்பாட்டுத்திறன் அடிப்படையில் (K3-Apply) இருபக்க அளவில் விடையளிக்கவும்.** **(K3)**

11. அ) தமிழ் நம்பியின் தமிழ் மொழிப்பற்றைக் கூறுக?
(அல்லது)
ஆ) புத்தகம் பற்றிய செய்திகளைக் கவிஞர் சேதுபதி எங்ஙனம் சுவைபடக் கூறுகின்றார்?

(த.பி.பா)

ETHICAL PAPER

12. ஆ) கல்வியின் பயன்களைப் பா.அருள்ஜோதி எவ்வாறு விளக்குகிறார்?

(அல்லது)

ஆ) உதயணனின் பல்வேறு திருமணங்கள் பற்றி உரைக்கவும்?

13. இடஞ்சுட்டிப் பொருள் விளக்கம் தருக.

அ) "இன்னும் எத்தனை ரகசியங்கள்
எத்தனை யவனக் காசுகள், ஓ நதியே உன் மடியில்?"

(அல்லது)

ஆ) "சித்திரம் போல் மோதிரங்கள்
சின்னண்ணா கொண்டு வந்தார்"

14. அ) சுட்டு, வினா எழுத்துகளுள் வல்லினம் மிகா இடங்களைச் சான்றுடன் விளக்குக.

(அல்லது)

ஆ) வல்லினம் மிகும் இடங்களை எடுத்தெழுதுக.

15. அ) தமிழ் இலக்கணம் குறித்த செய்திகளைச் சிறப்பித்தெழுதுக.

(அல்லது)

ஆ) உரைநடை வேந்தர் இருவர் பணியைக் கூறுக.

**பகுதி - இ ( 5x 8 = 40 மதிப்பெண்கள்)**

**வினாக்கள் ஆய்தல் திறன் (K4/K5-Analysis) அடிப்படையில் அனைத்து வினாக்களுக்கும் கட்டுரை வடிவில் விடை தருக.**

16. அ) எங்கள் தாய் என்று கூறும் பாரதியாரின் உணர்வுகளைப் புலப்படுத்துக.

(அல்லது)

ஆ) மலேசியாவில் வாழும் தமிழர்களின் இன்னல்களைத் தவம் கவிதை எவ்வாறு படம் பிடித்துக் காட்டுகின்றது?

17. அ) உழத்தியின் பெருமைகளைக் கூறும் திறத்தினைப் புலப்படுத்துக.

(அல்லது)

ஆ) சங்கப் பெண்பாற் புலவர்களின் சான்றாண்மையை விவரி.

18. அ) சரணாகதியின் தன்மைகளை மகாலட்சுமி கட்டுரை எவ்வாறு சிறப்பிக்கின்றது?

(அல்லது)

ஆ) அம்பிகாபதிக் கோவை இயம்பும் அகப்பொருள் மரபுகள் பற்றிய செய்திகளை விளக்கி வரைக.

19. அ) வ.வே.சு. ஐயரின் குளத்தங்கரை அரசமரம் கூறும் செய்திகளைச் சுவைத்தெழுதுக.

(அல்லது)

ஆ) யானை கூறும் செய்திகள் சூழலியத்தை உற்று நோக்குகின்றன எனும் திறத்தில் ஆராய்க.

20. அ) தாய்மொழி எனும் தலைப்பில் கவிதை ஒன்றைத் தருக.

(அல்லது)

ஆ) பேராசை விடு எனும் பொருண்மையில் சிறுகதை ஒன்றை எழுதுக.



*******